புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு.
(கணிதம்,நுண்ணறிவு)

Zoom ஊடாக



www.lkedu.lk

Whatsapp - 075 8647473

1) பாடசாலையொன்றில் பரீட்சை எழுதிய மொத்த மாணவர்களில் $\frac{2}{5}$ பேர் சித்தியடைந்தனர், சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை 60 எனின் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை யாது ?

.....

.....

2) மார்ச் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை எனின்,மார்ச் மாதம் 29ம் திகதி என்ன கிழமையாகும்?

.....

.....

3) 5 மீற்றர் நீளமான தடியினை 5 மாணவர்களிற்கு சமமாகப் பகிர்ந்தளிப்பதற்கு ஒரே வெட்டில் வெட்டக்கூடியக் கத்தியால் எத்தனை தடவை வெட்ட வேண்டும் ?

.....

.....

4) மாமா காலையில் கோயிலுக்குச் செல்லும் போது அவரது நிழல் அவரது வலது கைப்பக்கத்தில் விழுவதை காணக்கூடியதாக இருந்தது. அவ்வாறெனில் அவர் எத்திசையை நோக்கி சென்றார் ?

.....

.....

5) ஒரு தேக்கரண்டியின் அளவு 5ml ஆகும். ஒரு தடவையில் இவ்விரண்டு தேக்கரண்டிகள் வீதம் ஒரு நாளைக்கு 3 தடவைகள் மருந்து அருந்தும் ஒருவர் 3 நாட்களுக்கு அருந்தும் மருந்தின் மொத்த அளவு யாது ?

.....

.....

6) ராதாவின் வயது 20.நிமலின் வயது 10 எனின் ராதாவின் வயது நிமலின் வயதைப்போல் இரு மடங்காகும் போது நிமலின் வயது என்னவாக இருக்கும்?

.....

.....

7) சம இடைவெளி தூரத்தையுடைய இரு கடைகளுக்கிடையிலான தூரம் 300m ஆயின் நான்கு கடைகளுக்கிடையிலான தூரம் யாது ?

.....

.....

8) வடக்குத்திசை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கும் கௌரியின் இடது கைப்பக்கமாக என்னத்திசை அமைந்திருக்கும் ?

.....

.....

9) இம் மாதம் 5ஆம் திகதி திங்கட்கிழமையாயின் இம்மாதம் 25ஆம் திகதி என்ன கிழமையாகும் ?

.....

.....

10) பின்னமாக மாற்றுக.

I 0.25 = ...

II 0.02 = ...

11) ஒன்பது மனிதர்கள் ஐந்து நாட்களில் செய்து முடிக்கும் வேலையை பத்து மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பர் ?

.....

.....

12) 300 இன் $\frac{1}{4}$ உடன் 75ஐக் கூட்டி 75ஐக் கழிக்கும் போது கிடைக்கும் விடை யாது ?

.....

.....

13) சித்திரை மாதத்தின் முதலாம் திகதி புதன்கிழமை எனின் அந்த மாதத்தில் வரக்கூடிய புதன் கிழமைகளின் திகதிகளின் கூட்டுத்தொகை யாது?

.....


.....

14) ஒருவர் ஒரு வாரத்தில் அலுவலகமொன்றில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 5.00 வரைக்கும் கடமையாற்றுகின்றார்.மதியம் 1 மணித்தியாலம் உணவிற்காக ஓய்வு பெறுகிறார்.ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாளெனில் அவர் வாரத்தில் எத்தனை மணித்தியாலங்கள் வேலை செய்கின்றார் ?

.....

.....

15) தரப்பட்ட எண்கோலத்திற்கேற்ப இடைவெளிக்கு வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.



16) 1 தொடக்கம் 100 வரை எண்களை எழுதும் போது இலக்கம் 9 எத்தனை தடவைகள் எழுதப்படும்.

.....

.....

17) 1 இற்கும் 20 இற்கும் இடையிலுள்ள இரட்டை எண்களின் கூட்டுத்தொகை யாது ?

.....

.....

18) ஒரு ஆற்றின் நீர் மணிக்கு 4 கிலோ மீற்றர் வேகத்தில் பாய்கின்றது. மனிதன்னொருவன் மணிக்கு 6 கிலோமீற்றர் வேகத்தில் ஆற்று ஓட்டத்திற்கு எதிராக வள்ளம் ஒன்றைச் செலுத்துகின்றான்.அவன் செல்கின்ற உண்மையான வேகத்தை மணிக்கு எத்தனை கிலோ மீற்றர் எனக் காண்க ?

.....

.....

19) இரண்டு குதிரைகள் ஓரிடத்திலிருந்து புறப்பட்டு எதிர்த்திசையில் 50m தூரம் செல்கின்றன.பின்னர் ஒரு குதிரை இடப்பக்கமும் மற்றைய குதிரை வலப்பக்கமும் திரும்பி ஒவ்வொரு 100m தூரம் செல்கின்றன.இப்போது இரண்டு குதிரைகளுக்கிடையிலான தூரம் எவ்வளளவு ?

.....


.....

20) ஒரு நிரையில் கண்ணன் தொடக்கத்திலிருந்து 5ஆவதகாக நிற்கின்றான்.அவன் கடைசியிலிருந்து 8 ஆவதாக நிற்கின்றான் .இதற்கேற்ப நிரையில் எத்தனை நபர்கள் நிற்கின்றனர் ?

.....

.....

21) இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது ?



22) ரவி வீட்டிலிருந்து பாடசாலைக்குக்குள்ள தூரம் 25km ஆகும்.$\frac{2}{5}$ இனை பேருந்திலும் மீதியின் $\frac{1}{3}$ பங்கை உந்துருளியிலும் மீதித்தூரத்தை நடந்தும் சென்றான்.நடந்து சென்ற தூரம் யாது ?

.....

.....

23) விமல் முதல் நாளில் ஓர் உண்டியலில் ரூ.10ஐ இடுகின்றான்.அதன் பின்னர் ஒவ்வொரு நாளும் முந்திய நாளில் இட்ட பணத்தினலும் பார்க்க ரூ10 வீதம் கூடுதலாக உண்டியலில் இடுகிறான். இவ்வாறாக உண்டியலில் சேரும் மொத்தப் பணம் எத்தனையாம் நாளில் முதன் முதலாக ரூ.500 இலும் கூடுதலாக இருக்கும் ?

.....

.....

24) ஒரு பாத்திரத்தில் 1.5 லீற்றர் நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் உள்ள ஒரு சிறிய துவாரத்திலிருந்து ஒவ்வொரு நிமிடமும் 50 மில்லிலீற்றர் நீர் கசிந்து வெளியேறுகின்றது.அதற்கு ஏற்ப அப்பாத்திரம் முற்றாக வெறுமையாவதற்கு எடுக்கும் நேரம் எத்தனை நிமிடம்?

.....

.....

25) ஒரு சதுர வடிவக் காணியைச் சுற்றி 44 தூண்கள் நடப்பட்டனவெனின் ஒரு பக்கமிருந்து பார்க்கும் போது எத்தனை தூண்கள் தென்படும் ?

.....

.....

26) ஓர் அனர்த்தம் காரணமாக மே 14ஆந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் உட்படத் தொடர்ச்சியாக 9 நாட்களும் ஒரு பாடசாலை மூடப்பட்டது.அப்பாடசாலை மறுப்படியும் திறக்கப்பட்ட தினம் யாது ?

.....

.....

27) 31 நாட்கள் உள்ள ஒரு மாதத்தில் முதலாந் திகதி ஒரு திங்கட்கிழமை ஆகும்.அம்மாதத்தில் 31 ஆம் திகதி என்னக்கிழமையாகும் ?

.....

.....

28) மு.ப 9.00 மணியலவில் நான் தபாற்கந்தோர் செல்லும் போது எனது நிழல் எனது பின்னால் வந்தது எனின் நான் பயணம் செய்த திசை யாது ?

.....

.....

29) 36cm ஒரு பக்கம் நீளமுள்ள சதுரமொன்றின் சுற்றளவு யாது ?

.....

.....

30) ஒரு சட்டை தைப்பதற்கு 2 மீற்றர் 50 செ.மீ துணி தேவை எனின் மூன்று சட்டைகள் தைப்பதற்கு எவ்வளவு துணி தேவைப்படும் ?

.....

.....

31) ராஜாவிடம் இருந்த பணத்தொகையை விட 25 ரூபாய் கூடுதலாக ஆயிஷாவிடம் இருந்தது .ஆயிஷா15 ரூபாவை ராஜாவுக்குக் கொடுத்தால்,ராஜாவிடம் உள்ள பணத்தொகை ஆயிஷாவிடம் உள்ள பணத்தொகையிலும்,

1.ஐந்து ரூபாவினால் கூடியது.
2.பத்து ரூபாவினால் கூடியது.
3.பத்து ரூபாவனால் குறைவானது.

32) 5m நீளமுள்ள ஒரு நாடாவிலிருந்து ஒவ்வொன்றும் 20cm நீளமுள்ள 5 துண்டுகள் வெட்டப்பட்டன.நாடாவின் எஞ்சியுள்ள பகுதியின் நீளம் யாது ?

.....


.....

33) ஒரு தொட்டியில் நிரப்பத்தக்க நீரின் கனவளவு 8 750 லீற்றர் ஆகும். அத்தொட்டியில் தற்போது 3 650 லீற்றர் நீர் உள்ளது. எஞ்சியுள்ள பகுதியை நிரப்பத் தேவைப்படும் நீரின் கனவளவு யாது ?

.....


.....

34) தரப்பட்ட எண்கோலத்திற்கேற்ப இடைவெளிக்கு வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.



1) 28 **2) 32** **3) 40**

35)



2 3 3

36) A இலிருந்து நகரம் B வரையுள்ள தூரம் 5km 750m ஆகும்.நகரம் B இலிருந்து நகரம் c வரையுள்ள தூரம் 7km 500m ஆகும்.நகரம் A இலிருந்து நகரம் B இன் ஊடாக நகரம் C வரை உள்ள மொத்த தூரம் யாது ?

.....

.....

37) கூட்டுக. $\frac{1}{6} + \frac{2}{3}$ .....

38) கழியுங்கள்.

l	ml	l	ml
2	500	16	200
-	900	- 7	800

39) 2l இல் எத்தனை 250ml உள்ளன ?

.....

.....

40) பின்வரும் எண் கோலத்தை பூர்த்தி செய்க ?

3, 9 ,15 ..... , ...

புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டல் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்.

Zoom ஊடாக

(கணிதம், நுண்ணறிவு, தமிழ் ,சுற்றாடல்)

ஜெஸா சேர்

whatsapp 0758647473